# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண்: 004/பேரூ/2023**
**நாள் : 05.03.2023**

திரு. R. செல்வகணபதி,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, கிழக்குத் தெரு, எண்.11 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. R. செல்வகணபதி என்பவரது 25.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.08.2022 அன்று பெறப்பட்டு 004/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

2) தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி, கிழக்குத் தெரு, எண்.11 என்ற முகவரியில் வசித்து வரும் திரு. R. செல்வகணபதி என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"In the orders passed by the Hon'ble Tamil Nadu Local Bodies Ombudsman the Executive Officer was directed to analyse the complaint made by me in regard to the plan violation sanctioned to Tvl. Mariammal and Nesamani against rules. The Executive Officer probed the matter and found correct of my complaint.

I humbly submit that even the sanction itself is violation of rules in Sanctioned for 121 sq.ft and 182 sq.ft for house. As per Existing Government Order minimum 235 sq.ft. is prescribed for a house.

Again the construction was still temporary i.e., Tin shed by Tmt. Nesammani even till date. Tax levied, door number provided and hence E.B. sanctioned.

These things were duly objected even before sanction as it is my ancestral dwelling house. Subsequently the Hon'ble court passed permanent injunction orders against Mariammal and Nesamani. The R.D.O. passed orders cancelling the patta in their name (Both orders are not appealed yet) I got patta in my name which was sent to the Executive Officer.

I made an application for plan approval in February 2021 but inordinately delayed without proper reply saying frivolous reasons. Made complaint to the commissioner no response. According in G.O. Plan must be approved but delayed due to malfied intention, hence caused mental agony and monitory loss.

Prayer:

1. To cancel the plan approval and door number sanctioned to Tvl.Mariammal and Nesamani.
2. To pass orders to sanction plan approval for my building immediately without delay.
3. To pass orders initiating disciplinary action against the officers concerned who made inordinate delay, suppressing of facts and colluded with criminals and caused monitory lose and mental agony.

3) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவத்தின் 11.08.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

4) உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 02.09.2022 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

"திருநெல்வேலி மண்டலம், தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள திசையன்விளை முதல் உடன்குடி செல்லும் மெயின் சாலையில் உடன்குடி வருவாய் கிராமம் நத்தம் சர்வே எண்.870/10இல் ஏற்கனவே உள்ள கதவு எண்.12டி, 12இ, 12எப், 307, 308 ஆகியவற்றுடன் சேர்த்து புதிதாக மூன்று கடைகளும் ஒரு வீடும் கட்ட திரு. ஆர். செல்வகணபதி என்பவரால் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த விண்ணப்பம் மீது பேரூராட்சி மூலம் பரிசீலிக்கப்பட்டதில் அவரால் அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி ஏற்கனவே 2982 சதுர அடி வணிக கட்டிடம் இதே புல எண்ணில் உள்ளதாகவும், புதிதாக வணிக கட்டிடம் கட்ட 822 சதுர அடிக்கு அனுமதி கோரப்பட்டதால் மொத்த பரப்பானது 3804 சதுர அடி வரும் என்பதாலும் பேரூராட்சி செயல் அலுவலருக்கு வணிக கட்டிடங்களுக்கான வரைபட அனுமதி வழங்கும் அதிகார வரம்பான 2000 சதுர அடிக்கு மேல் தாண்டி உள்ளதால் நகர் ஊரமைப்புத் துறையிலிருந்து தொழில் நுட்ப அனுமதி பெற்று விபரம் தெரிவிக்க இவ்வலுவலகம் மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் பேரூராட்சி அலுவலகம் மூலம் அன்னாரது பெயரில் வரைபட அனுமதி கோரிய நிலத்திற்கான உடமைக்கு எவ்வித வில்லங்கமும் இல்லாத உறுதியான

ஆவணங்கள் சமர்ப்பிக்க கேட்டுக்கொண்ட போதிலும் அதற்கு சரியான ஆவணங்கள் ஏதும் மனுதாரரால் சமர்ப்பிக்கப்படவில்லை. அத்துடன் மனுதாரரின் சகோதரிகள் திருமதி. ஆர். நங்கையார் மற்றும் திருமதி ஆர். இராஜ இராஜேஸ்வரி உமா ஆகியோர் ஏற்கனவே திரு. ஆர். செல்வகணபதி என்பவரால் சர்வே எண்.870/10/இல் வரைபட அனுமதி ஒப்புதல் வேண்டப்பட்டால் வழங்க கூடாதென ஆட்சேபணை செய்யப்பட்டது. அது குறித்தும் ஏற்கனவே இம்மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் மீளவும் மனுதாரரால் அளிக்கப்பட்ட கடிதத்துடன் இணைக்கப்பட்ட புல எண்.870/10க்கான நத்தம் நிலவரி திட்ட பட்டாவிலும் திருமதி. ஆர். சுப்பம்மாள் மற்றும் திரு. ஆர். செல்வகணபதி ஆகிய இருவர் பெயரிலும் தாக்கலாகி உள்ளது. இவ்வாறு வருவாய்த் துறை சார்ந்த நில உடமைக்கான பட்டாவில் இருவர் பெயர் உள்ளதால் இக்குடும்பத்தில் பாகப்பிரிவினை முறையாக செய்து அதன் பின்னர் மனுதாரருக்கென இடம் உட்பிரிவு செய்யும் பட்சத்தில்தான் மனுதாரர் மனு மீது கட்டிட வரைபட அனுமதி வழங்கிட பரிசீலிக்க இயலும். ஆனால், மனுதாரரால் இக்கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு கடை வணிக நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

மேலும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள திருமதி. மாரியம்மாள் மற்றும் திருமதி. நேசமணி ஆகியோருக்கு இப்பேரூராட்சி மூலம் வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதியை ரத்து செய்து அந்த வரிவிதிப்புகளையும் ரத்து செய்ய வேண்டும் என்பது தொடர்பாக ஏற்கனவே இம்மனுதாரரால் திருச்செந்தூர் மாண்பமை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு O.S.No.58/2020 மற்றும் O.S.No.60/2020 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. அத்துடன் மனுதாரரின் சகோதரரான காலஞ்சென்ற திரு. ஆர். முத்துகுமாரசுவாமி அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தினை கிரையப்பத்திரம் மூலம் திருமதி. நேசமணி மற்றும் திருமதி. மாரியம்மாள் என்பவருக்கு எழுதிக் கொடுத்ததன் பேரில் அந்த இருவரால் வரைபட அனுமதி பெற்று வரி விதிப்பும் செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதே மனுதாரரால் உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் செய்யப்பட்ட புகார் மனு மீது பிறப்பிக்கப்பட்ட 23.12.2019 நாளிட்ட ஆணைக்கிணங்க பேரூராட்சி மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரைபட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டப்பட்டது தொடர்பாக அவற்றை அகற்ற சம்பந்தப்பட்ட நபர்களுக்கு அறிவிப்புகள் சார்பு செய்யப்பட்டது. இதற்கிடையில், மனுதாரரால் மாண்பமை திருச்செந்தூர் உரிமையியல் நீதிமன்றத்தில் திருமதி நேசமணி மற்றும் திருமதி மாரியம்மாள் ஆகியோரை பிரதிவாதியாக்கி வழக்கு O.S.No.58/2020 மற்றும் O.S.No.60/2020 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருவதை சுட்டிக்காட்டி திருமதி. நேசமணி மற்றும் திருமதி. மாரியம்மாள் சார்பாக அவரது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு தாக்கல் செய்யப்பட்டு தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டப்பட்டது.

ஆதலால், மேற்படி வழக்குகளில் மாண்பமை நீதிமன்றத்தால் வழங்கப்படும் தீர்ப்பின் அடிப்படையில் வரைபட அனுமதி ரத்து செய்வது தொடர்பாகவும், வரிவிதிப்பு ரத்து செய்வது தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" எனத் தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 25.01.2023 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 19.01.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 25.01.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகி தனது கைப்பட எழுதிக்கொடுத்த வாக்குமூலத்தை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்தார் அதில் :-

எனது முறையீட்டு மனு எண்.152/18ல் செயல் அலுவலர் பல உண்மைகளை மறைத்தும், திரித்தும், (அரசு ஆணைப்படி) தகுதியற்ற வழக்கறிஞர் மூலம் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற தீர்ப்புகளை அவமதிக்கும் வகையில், சட்ட விரோத கருத்துரு பெற்றும், உரிய மனுதாரர்களில் ஒருவரான எனது சகோதரி முத்துவடிவு (தற்போது உயிராபத்தான நிலையில் சிகிச்சையில் உள்ளார்). அவர்களை விசாரிக்கவே செய்யாமல், செயல் அலுவலரின் பொய்யுரைகளை என்னிடத்தில் பதிலுரை பெறாமலும் உள்ளாட்சி துறை அலுவலர்களுக்குச் சாதகமாக பிறப்பித்த ஒருதலைப்பட்சமான ஆணையை எதிர்த்து குறைகளைச் சுட்டி சீராய்வு சமர்ப்பித்தும் ஏற்கப்படவில்லை என்பதனைப் பதிவு செய்ய விழைகிறேன்.

எனினும் மேற்படி ஆணையில் அரசாணைக்கு (255 R.D. (C2) நாள்:18.8.1997) சட்ட விரோதமாக வழங்கப்பட்ட வரைபட ஒப்புதல்களை 121, சதுர அடி (தற்காலிக தகர கொட்டகை மற்றும் 182 சதுர அடி (194/10-11 மற்றும் 200/2010)யும், கதவு எண்கள், வரிவிதிப்புகளையும் ரத்து செய்ய வேண்டும் என்ற எனது கோரிக்கையை பரிசீலனை செய்ய ஆணையிடப்பட்டது.

அதன்படி செயல் அலுவலர் என்னால் சுட்டிக்காட்டப்பட்ட குறைகளை, உண்மை எனக் கண்டறிந்தும், வழக்கம்போல் ஒரு தனி வழக்கறிஞரின் சட்ட அறிவிப்பைக் காட்டி தீய உள்நோக்குடன் குற்றவாளிகளுக்கு ஆதரவாக நடவடிக்கை கைவிடப்படுவதாக தெரிவித்துள்ளார். அதில் நிலுவையில் உள்ளதாகக் காட்டப்படுவது, நான் இழப்பீடு கோரியும், அனுபவ மீட்பு குறித்தும் தாக்கல் செய்த இரு வழக்குகள், வழக்கின் நோக்கம் எதுவானாலும், யார் தாக்கல் செய்திருப்பினும், வரைபட மீறல், விதிமீறல் சரியாகுமா ? அது நடவடிக்கைக்கு உகந்தது தான் அதனை மறுப்பது நீதிமன்ற அவமதிப்பு மட்டுமல்லாது குற்றவாளிகளுக்கு ஆதரவான நில அபகரிப்புக் கூட்டுக் குற்றவாளியாகக் கருதப்பட வேண்டும்.

அடுத்து தற்போது எனது மேற்படி இல்லத்தில் 3x160=480 சதுர அடி கடைகளுக்கு ஒப்புதல் கோரிய போது (சனவரி, 2021) தேர்தல் வரை பொறுத்த பின் மேற்படி சட்டவிரோத வரைபடங்களை ரத்து செய்து உரிய ஒப்புதல் தருவதாக உறுதி அளித்து மாறாக அனைத்து விஸ்தீரணமும் சேர்த்து 3809 சதுர அடிக்கு தனக்கு வரம்பில்லை என்றும், எனது இரு சகோதரிகளும் ஆட்சேபனை தெரிவித்ததாகவும் மறுத்தார். மேற்படி சகோதரிகள் எனது பராமரிப்பில் என்னுடன் வசித்து வரும் நபர்கள். எனவே விசாரணை கோரினேன். இன்று வரை பதில் இல்லை. மாறாக நில ஆவணம் கோருகிறார். பட்டா அனுப்பிய பின்னரும் பதில் இல்லை.

மிகவும் வருத்தமும் வேதனையும் கூடிய உண்மை எது என்றால், இயக்குநரகமும் கூட்டாக செயல்படுவது தான். இதே செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்க இதே தீர்ப்பாயம் பிறப்பித்த ஆணைகளையும் மதிப்பது இல்லை என அறிகிறேன்.

உடன்குடியில் அரசு பணம், விரையம், நிதி இழப்பு, விதி மீறல்களுக்கு இதே செயல் அலுவலர் உடன்பட்ட விபரங்கள் உள்ளது. அது குறித்து லஞ்ச ஒழிப்பு துறைக்கு மனு அனுப்ப உள்ளேன்.

கடந்த ஒன்றரை வருடகாலம் சுமார் 4 முறை இயக்குநரகத்தில் வந்து வேண்டியும், 22.12.2022ல் இயக்குநரை நேரில் சந்தித்தும் கீழ்நிலை அலுவலர்களுக்கு ஆதரவாக செயல்படுவதுடன் இயக்குநர் ஆவணங்களைப் பார்வையிடவும் மறுத்துவிட்டார்.

மேற்காண் சூழ்நிலையில் தனி நபருக்கும், அரசுக்கும், பல வகைகளில் துரோகம் இழைத்து நிதி இழப்பு ஏற்படுத்திய செயல் அலுவலர் மீது TNLBO சட்டம் 27 பிரிவு 11,12, b,c,d,ன் படி நடவடிக்கை எடுக்கவும்

2) உடனடியாக சட்டவிரோத, விதிமீறல் வரைபட ஒப்புதல், கதவு எண். தீர்வை (12, D,E,F, 307-D) ரத்து செய்யவும்.

3) நான் கோரிய வரைபட ஒப்புதல் உடனே வழங்கிடவும்,

4) எனது இழப்பினை ஈடு செய்ய இதர வகை நிவாரணத்துக்கு உரிய ஆணை வழங்கிட பிரார்த்திக்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

7. தூத்துக்குடி மாவட்டம், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் 25.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

“தூத்துக்குடி மாவட்டம் உடன்குடி பேரூராட்சி திசையன்விளை – உடன்குடி மெயின் சாலையில் சர்வே எண் 870/10ல் உள்ள கதவு எண் 12டி, 12 இ, 307 மற்றும் 308 ஆகியவற்றை சேர்த்து புதிதாக மூன்று கடைகளும் ஒரு வீடும் கட்ட மனுதாரரால் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பம் அளித்துள்ளார் எனவும் அவரது விண்ணபத்தை பரிசீலனை செய்யும்போது அவருடைய சகோதரிகள் திருமதி ஆர். நங்கையார் மற்றும் திருமதி ஆர். இராஜ இராஜேஸ்வரி உமா ஆகியோரால் ஆட்சேபனைக் கடிதம் 23.4.2021 அன்று வழங்கப்பட்டுள்ளது. அதில் திரு. ஆர். செல்வகணபதி என்பவரால் சர்வே எண் 870/10ற்கு வரைபட அனுமதி ஒப்புதல் கோரப்பட்டால், ஒப்புதல் வழங்கக்கூடாது என மேற்கண்ட இருவரும் தெரிவித்து கையொப்பமிட்டு அளித்துள்ளனர். இதனையடுத்து வரைபட அனுமதி கோரிய நிலத்திற்கான உறுதியான ஆவணங்கள் சமர்ப்பிக்க மனுதாரரிடம் கோரப்பட்டது. மனுதாரர் மேற்கண்ட ஆவணங்களை அளிக்காமல், மேற்கண்ட ஆட்சேபனைக் கடிதம் போலியானது என்றும் அதில் உள்ள கையொப்பம் அவரது சகோதரிகளால் கையொப்பமிடப்படவில்லை என்றும், மேலும் இது குறித்து விசாரணை மேற்கொள்ள வேண்டும் என பேரூராட்சியை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட ஆட்சேபனை தெரிவித்துள்ள மனுதாரரின் சகோதரிகள் திருமதி ஆர். நங்கையார் மற்றும் திருமதி ஆர். இராஜ இராஜேஸ்வரி உமா ஆகியோர் மேற்கண்ட ஆட்சேபனை கடிதத்தை ரத்து செய்யவும் என தெரிவித்து மனுதாரர் கடிதம் அளித்தாலோ அல்லது மேற்கண்ட ஆட்சேபனைக் கடிதம் போலி எனவும் அதில் உள்ள கையொப்பம் தங்களது கையொப்பம் இல்லை என தெரிவித்து கடிதம் அளித்தாலோ மேற்கண்ட மனுதாரருக்கு விதிகளின்படி மனுதாரர் கோரியுள்ள பரப்பளவிலான

இடத்திற்கு அதாவது 1386 சதுர அடிக்கு கட்டட அனுமதி வழங்கப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்பு செய்து போடப்பட்டுள்ள தகரக் கொட்டகையிலான ஷெட் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறை மன்ற நடுவரின் 23.12.2019 நாளிட்ட இறுதியாணையின்படி பேரூராட்சியால் சட்ட விதிகளை பின்பற்றி அகற்றப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 25.01.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும், எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தை வேண்டிக்கொண்டு, இந்நேர்வு தொடர்பான ஆவணங்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்'' எனத் தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அவரது கைப்பட எழுதிக்கொடுத்த வாக்குமூலம், உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் திரு. இரா. செல்வகணபதி தனது மனுவில் திருமதி. மாரியம்மாள் (ம) நேசமணி ஆகியோருக்கு வழங்கப்பட்ட கட்டட வரைபட அனுமதியினை ரத்து செய்யக் கோரியுள்ளார்.

1908 ஆண்டு உரிமையியல் நடைமுறை சட்டம் பிரிவு-11–இல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>11. Res judicata</u> – No court shall try any suit or issue in which the matter directly and substantially in issue has been directly and substantially in issue in a former suit between <u>the same parties,</u> or between parties under whom they or any of them claim, litigating under the same title, in a court competent to try such subsequent suit or the suit in which such issue has been subsequently raised and has been heard and finally described by such court.

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014 பிரிவு 8(1)யில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"The Ombudsman shall for the purpose of any enquiry have all the powers of the civil court trying a suit under CPC 1908 and in particular, in respect of the following matters namely:- summoring and enforcing the attendance of complaintant or witnesses and examing him/her on oath,

XXXX XXXX XXXXX

மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவுகளின்படி மனுதாரர் கோரியுள்ள கோரிக்கை குறித்து நேரடி விசாரணை மேற்கொண்டதன் அடிப்படையில் 23.11.2019 நாளிட்ட முறையீட்டு மனு நாள்: 152/2019/பே-ல் விரிவான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் மீண்டும் இப்பொருள் குறித்து விசாரணை மேற்கொள்ளும் நிலை எழவில்லை.

திசையன்விளை –உடன்குடி மெயின் சாலையில் சர்வே எண்.870/10ல் உள்ள கதவு எண்.12டி, 12இ. 307 (ம) 308 ஆகியவற்றை சேர்த்து புதிதாக மூன்று கடையும் ஒரு வீடும் கட்ட மனுதாரரால்

கட்டட அனுமதி வேண்டி அளித்துள்ளதில் அவருடைய சகோதரிகள் திருமதி. ஆர். நங்கையார் (ம) ஆர். இராஜ இராஜேஸ்வரி உமா ஆகியோரால் ஆட்சேபனைக் கடிதம் வழங்கப்பட்டுள்ளதையும் சர்வே எண்.870/10க்கு வரைபட அனுமதி ஒப்புதல் வழங்கப்படக்கூடாது என்றும் உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலத்தின் மூலம் அறியமுடிகிறது.

மேலும் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மனுதாரரின் சகோதரிகள் திருமதி. ஆர். நங்கையார் (ம) திருமதி. ஆர். இராஜ இராஜேஸ்வரி உமா ஆகியோரிடமிருந்து ஆட்சேபனை கடிதத்தினை ரத்து செய்ய கடிதம் அல்லது ஆட்சேபனை கடிதம் போலி கடிதம் அதில் உள்ள கையொப்பம் தங்களது கையொப்பம் இல்லை என கடிதம் அளிக்கும் பட்சத்தில் கட்டட அனுமதி கோரியுள்ள இடத்திற்கு விதிகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் தெரிவித்துள்ள ஆக்கிரமிப்பு செய்து போடப்பட்டுள்ள தகரக் கொட்டகையிலான ஷெட்டினை 23.11.2019 நாளிட்ட இறுதியாணையின் அடிப்படையில் சட்ட விதிகளை பின்பற்றி அகற்றிட நடவடிக்கை மேற்கெள்ளுமாறும் உடன்குடி பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு, மார்ச் 5–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R. செல்வகணபதி,
எண்.11, கிழக்குத் தெரு,
உடன்குடி, தூத்துக்குடி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
உடன்குடி தேர்வுநிலை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம் ,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.

இ.கோ/உதிரி//

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/3/23

செயலாளர்.